**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-2　　Date : 20/06/2023

Case No. : **O.S. 469/2019**　　Nationality : Indian

Name : சங்கர், உதவி பொறியாளர், எஸ்.புதூர், பாசன பிரிவு, நீர்வளத்துறை　　Religion :

Age :45

Father's/Husband's Name :

Village :

Taluk :

வா.சா.2

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**முதல் விசாரணை :-**

1. நான் பணிபுரியும் துறை முன்பு பொதுப்பணித்துறையுடன் சேர்ந்திருந்து தற்போது நீர்வளத்துறையாக தனியாக செயல்பட்டு வருகிறது. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்ததன்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எஸ்.புதூர் கிராமத்தில் உள்ள படுகை, ஆற்றுக்கரை போன்றவை எங்கள் துறையின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை நான் எடுத்து வந்துள்ளேன்.

2. எஸ்.புதூர் கிராமம் புல எண்.193/2 வெள்ளக்கரை புறம்போக்கு ஸ்தலத்தில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள தென்னைமரமானது புல எண்.218/9 ல் குடியிருநது வரும் கோவிந்தராஜ் என்பவர் வீட்டில் மேற்புறம் சாய்ந்த நிலையில் இருந்ததால் அவரது வீட்டிற்கும், குடும்பத்தினரின் உயிருக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருந்ததால் மேற்படி தென்னை மரத்தினை அப்புறப்படுத்திட 28/03/2017 ம் தேதி ந.க.எண்.8119/2015/அ 3 ன் மூலம் கும்பகோணம் சார்ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி உத்தரவின் அசலை எடுத்து வந்துள்ளேன். அசல் எங்களது அலுவலக பணிக்கு தேவைப்படுவதால் அதன்

உண்மைநகலை தாக்கல் செய்கிறேன். மேற்படி உத்தரவு உண்மைநகல் சா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. அதனை தொடர்ந்து காவிரி வடிநில கோட்டம் செயற்பொறியாளர் 31/07/2017 ம் தேதி கடித எண்.1896/2017/த 4 மூலமாக மேற்படி தென்னை மரம் விரிவான விளம்பரம் செய்து ஏலம் விடப்பட்டதாகவும், ஏலப் பொருளான மரத்தை வெட்டி எடுத்து செல்ல அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார். மேற்படி உத்தரவின் அசலை எடுத்து வந்துள்ளேன். அசல் எங்களது அலுவலக பணிக்கு தேவைப்படுவதால் அதன் உண்மைநகலை தாக்கல் செய்கிறேன். மேற்படி உத்தரவு உண்மைநகல் சா.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 24/11/2016 ம் தேதியிட்ட வட்டாட்சியர் மற்றும் உதவி பொறியாளரால் வழங்கப்பட்ட ஸ்தல ஆய்வுக்குறிப்பு உண்மைநகல் சா.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி தென்னை மரத்தை ஏலம் விடுவதற்காக பொது ஏல விளம்பர அறிவிப்பு உண்மைநகல் சா.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏல நடவடிக்கைக்கான முன் வைப்பு தொகை விபர சான்று உண்மைநகல் சா.சா.ஆ-5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏல நடவடிக்கை உண்மைநகல் சா.சா.ஆ-6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏலம் எடுத்தவரால் ஏல தொகை செலுத்தப்பட்டதற்கான செல்லான் உண்மைநகல் சா.சா.ஆ-7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏல அறிக்கை சா.சா.ஆ-8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஏல நடவடிக்கையின் மூலம் மேற்படி தென்னை மரம் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது. மேற்படி ஏல நடவடிக்கை தொடர்பாக அலெக்சாண்டர் (எ)சுரேஷ்குமார் என்பவரால் ஆட்சேபணை எதுவும் செய்யப்பட்டதா என்றால் என்னிடம் ஆட்சேபணை எதுவும் செய்யப்படவில்லை. ஆட்சேபணை செய்யப்பட்டதாக ஏல நடவடிக்கை கோப்பிலும் இல்லை.

<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.